**25.01.2019**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் (IUDM) 2018–19ன் கீழ் ரூ. 72.25 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் பணிக்கு அரசாணை எண். 82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 23.08.2018ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் 2018–19 செந்தூர விலையின் படி மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டை ரூ.87.25 கோடியாக மாற்றி மானியம் பெற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் மூலம் TUFIDCO நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பேரில், TUFIDCO நிறுவனம் மூலம் நடத்தப்பட்ட மதிப்பீடு கூட்டத்தில் மேற்கண்ட பணிக்கு ஒரு வருட ஒப்பந்ததாரர் பராமரிப்பிற்கான செலவினத்தை திருச்செங்கோடு நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதன் படி மேற்கண்ட பணிக்கு செயலாக்க மதிப்பீடு ரூ.81.22 கோடிக்கும் மற்றும் ஒருவருட ஒப்பந்ததாரர் பராமரிப்பு மதிப்பீடு ரு.2.63 கோடிக்கும் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடிதம் ந.க.எண். TgodeMpty/JDO3/RWS/NKL/2016,Dated:24.01.2019 தெரிவித்துள்ளதற்கிணங்க மேற்கண்ட பணியை மேற்கொள்ள ஏதுவாக ஒருவருட ஒப்பந்ததாரர் பராமரிப்பு தொகை ரூ.2.63 கோடி இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 11492 /2012/இ1)